## மாவட்ட உ ரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்
## கும்முடிப்பூண்டி

| வழக்கு எண்: C.C 313 /2019 | காவல் நிலையம்: சிப்காட் | |
|---|---|---|
| பெயர் : கணேசன் | அ.சா.1 | நாள் : 16.07.2025 |

மனுதாரர் தரப்பு சாட்சியான அ.சா.1 என்பவரின் வாக்குமூலம் 1969ஆம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின் படி திரு.தமிழரசன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கணேசன் | தாலுக்கா | : | -- |
| தந்தை பெயர் | : | கங்காதரன் | தொழில் | : | தனியார் வேலை |
| கிராமம் | : | புழல் | வயது | : | 47 |

(எதிரிகள் 1 முதல் 3 ஆஜர் இல்லை. எதிரிகளின் வழக்கறிஞர் ஆஜர். 1 முதல் 3 எதிரிகளுக்காக 355 B.N.S.S. ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

**முதல் விசாரணை**

நான் புழல் காவாங்கரையில் கடந்த 20 வருடங்களாக வசித்து வருகிறேன். நான் தற்போது திருவான்மையூரில் இயங்கி வரும் அசோக் மினரல் என்டர் பிரைசஸ் என்ற நிறுவனத்தில் அலுவலக உதவியாளராக கடந்த 23 வருடங்களாக பணிபுரிந்து வருகிறேன். மேற்படி நிறுவனத்திற்கு கிளை ஏதும் இல்லை. நான் இந்த வழக்கு சம்பவ காலமான 2013ம் வருடம் கும்மிடிப்பூண்டி சிப்காட்டிலுள்ள மேற்படி நிறுவனத்திற்கு சொந்தமான தொழிற்சாலையில் அலுவலக உதவியாளராக பணிபுரிந்து வந்தேன். கடந்த 04.01.2013ம் தேதி வழக்கம்போல் காலை சுமார் 8 மணிக்கு மேற்படி தொழிற்சாலைக்கு வேலைக்காக சென்றேன். மேலும், எங்களுடைய மேற்படி தொழிற்சாலைக்கு சொந்தமான குடோன் (சேமிப்பு கிடங்கு) ஒன்று மேற்படி தொழிற்சாலைக்கு எதிரில் உள்ளது. மேலும், மேற்படி சேமிப்பு கிடங்கிற்கு நானும் தொழிற்சாலையில் பணிபுரியும் பாதுகாவலரும் நேரில் சென்று கண்காணிப்பது எங்களுடைய வழக்கம். அதன் படி காலை 8 மணிக்கு மேற்படி சேமிப்பு கிடங்கை சென்று பார்த்தபோது, அதன் ஆஸ்பஸ்டாஸ் மேற்கூரை உடைக்கப்பட்டு அதன் வழியாக உள்ளே சென்று, சுமார் 10-15 எண்ணிக்கையுள்ள இரும்பு ராடு மற்றும் இரும்பு பைப் ஆகியவைகள் திருட்டு போயிருந்தது. மேற்படி சம்பவம் தொடர்பாக அதே தேதியில் சிப்காட் காவல் நிலையத்திற்கு சென்று நான் புகார் அளித்தேன். ஆனால் எத்தனை மணி என்று தற்போது எனக்கு ஞாபகமில்லை. என்னிடம் காட்டப்படும் புகார் நான் அளித்தது தான்.

**(அந்த புகார் அதசாஆ1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. பின்னர் காணாமல் போன பொருட்களை போலிசார் பறிமுதல் செய்தார்களா என்று எனக்கு தெரியாது. நான் கொடுத்த புகார் சம்பந்தமாக சிப்காட் போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவத்தின் போது மேற்படி நிறுவனத்தில் நான் மேற்பார்வையாளராக பணிபுரிந்து வந்தேன். அதற்கான ஆவணத்தை நான் போலிசாரிடம் அளிக்கவில்லை. சம்பவம் நடைபெற்ற இடத்திற்கும் சிப்காட் காவல் நிலையத்திற்கும் இடையே சுமார் 2 கிமீ தூரம் தான் இருக்கும் என்றால் சரிதான். 5 நிமிடத்தில் அங்கிருந்து காவல் நிலையம் வந்து விடலாம் என்றால் சரிதான். ஆனால் 5 மணி நேரம் கால தாமதமாக புகார் அளிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். காலதாமதத்திற்கான காரணத்தை நான் புகாரில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். திருடு போன பொருட்களின் எண்ணிக்கை மற்றும் அதன் நீள அகல விவரம் குறித்து தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். திருடு போனதாக கூறப்படும் பொருட்கள் எனது நிறுவனத்திற்கு சொந்தமானது என்பதற்கான ஆவணத்தையும் நான் போலிசாரிடம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். திருடு போன பொருட்களை யார் திருடினார்கள் என்று எனக்கும் அப்போதும் தெரியாது. இப்போதும் தெரியாது என்றால் சரிதான். திருடு போன பொருட்களை போலிசார் கைப்பற்றினார்களா என்பது பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

**(மறு விசாரணை இல்லை)**

ஓம்/– கணேசன்

திறந்த நீதிமன்றத்தில் வழக்கறிஞர்கள் முன்னிலையில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லப்பட்டு உடனுக்குடன் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு சாட்சியால் சரியாக உள்ளது என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

R. Senthil Kumar, M.A., B.L.,

Digitally signed by R. Senthil Kumar, M.A., B.L., Date: 2025.07.16 13:14:41 +0530

மாவட்ட உ ரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர்,
கும்முடிப்பூண்டி